நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பட்டுக்கோட்டை.
முன்னிலை – திரு. த.சுதர்சன்.,எம்.ஏ.எல்.எல்.பி.,
நீதித்துறை நடுவர், பட்டுக்கோட்டை.
2026 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 03–ம் நாள் வெள்ளிக்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண். 94/2021
CNR No.TNTJ11-001292-2021

அரசு சார்பாக காவல் உதவி ஆய்வாளர்,
அதிராம்பட்டிணம் காவல் நிலையம்
குற்ற எண்.97/2021 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

1. குமார வேல் (40/2026),
(A1) Spilt up from this case and assigned new CC.82/2024)
த/பெ. அடைக்கலம்,
சிவன்கோவில் தெரு, மேலத்தெரு,
பட்டுக்கோட்டை தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம்.

2) சூர்யா (வயது – 26/2026),
(A2) Spilt up from this case and assigned new CC.82/2024)
த/பெ. அன்பழகன்,
அக்ரஹாரம், மன்னார்குடி,

3. அடைக்கலம்(வயது –71/2026), (A3)
த/பெ. காளிமுத்து,
சிவன்கோவில் தெரு, மேலத்தெரு,
பட்டுக்கோட்டை தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம்.

4. இராஜேந்திரன் (வயது –75/2026),(A4)
த/பெ. கோவிந்தராஜ்,
சிவன்கோவில் தெரு, மேலப்பழஞ்சுர்,
பழஞ்சுர், பட்டுக்கோட்டை தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.

.... எதிரிகள்

**வழக்கு சுருக்கம்**

| வ.எண் | விவரங்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1) | வழக்கு எண் | 94/2021 |
| 2) | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | அதிராம்பட்டிணம் காவல் நிலையம், குற்ற எண்.97/2021 |

| | | |
|---|---|---|
| 3) | எதிரியின் பெயர், தந்தை பெயர் மற்றும் வயது, தொழில், முகவரி, | 1. குமார வேல் (40/2026),<br>(A1) Spilt up from this case and assigned new CC.82/2024)<br>த/பெ. அடைக்கலம்,<br>சிவன்கோவில் தெரு, மேலத்தெரு,<br>பட்டுக்கோட்டை தாலுக்கா,<br>தஞ்சாவூர் மாவட்டம்.<br><br>2) சூர்யா (வயது – 26/2026),<br>(A2) Spilt up from this case and assigned new CC.82/2024)<br>த/பெ. அன்பழகன்,<br>அக்ரஹாரம், மன்னார்குடி,<br><br>3. அடைக்கலம்(வயது –71/2026), (A3)<br>த/பெ. காளிமுத்து,<br>சிவன்கோவில் தெரு, மேலத்தெரு,<br>பட்டுக்கோட்டை தாலுக்கா,<br>தஞ்சாவூர் மாவட்டம்.<br><br>4. இராஜேந்திரன் (வயது –75/2026),(A4)<br>த/பெ. கோவிந்தராஜ்,<br>சிவன்கோவில் தெரு, மேலப்பழஞ்சுர்,<br>பழஞ்சுர், பட்டுக்கோட்டை தாலுக்கா, |
| 4) | சம்பவம் நடைபெற்ற நாள் | 05.02.2021 |
| 5) | புகார் அளித்த நாள் | 07.02.2021 |
| 6) | கைது செய்த நாள் | A1–AB<br>A2–AB |
| 7) | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 17.02.2021<br>09.02.2021 |
| 8) | அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்கு அனுப்பிய தேதி | – |
| 9) | விசாரணை தொடங்கிய தேதி | 28.02.2024 |
| 10) | விசாரணை முடிவுற்ற தேதி | 27.06.2026 |
| 11) | தீர்ப்பு அல்லது உத்தரவு | அரசு தரப்பில், குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிரான இதசபிரிவுகள் ச/பி.294(b),323,342,355,506(2)–ன் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்க தவறிவிட்டனர் என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டுவர்களுக்கு நல்கி குற்றவாளிகள் இல்லை என்று கு.வி.மு.ச பிரிவு |

| | | |
|---|---|---|
| | | 248(1) விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. |
| 12) | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்குதல் | ஆம் |
| 13) | காலதமதத்திற்கான காரணம் | குற்றப்பத்திரிக்கை 18.10.2021–ம் தேதி அன்றுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. 18.10.2021 ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இவ்வழக்கீன் தீர்ப்புரை 03.07.2026–ம் தேதி அன்று திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது. |

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 18.10.2021–ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் இன்றையதினம் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, குற்றமுறையிடுபவர் தரப்பில் திரு.M.ரூபேஷ்., B.A.,L.L.B.,(Hons)அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிகள் தரப்பில் திரு.R.ஜெயவீரபாண்டியன்., பி.எல்.சி.பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும் வழக்கு ஆவணங்கள், சாட்சியங்கள் அனைத்தும் பரிசீலனை செய்து இன்று வழங்கும்,

**தீர்ப்புரை**

**1). அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

வாதியின் கணவர் நித்யாவின் வீட்டு வழியே சென்றபோது, நித்யா என் வீட்டு வழியில் ஏன் செல்கீறிர்கள் என்று வாதியின் கணவரை கேட்க அதற்கு வாதியின் கணவர் இது உங்க இடமா என்று கேட்க ஆமாம் எங்கள் இடம் தான் என்று கூறியும், அப்போது, நித்யா வீட்டில் இருந்த எதிரிகள் அசிங்கமான வார்த்தைகளால் பேசியும், வாதியின் கணவரை காலால் உதைத்து தள்ளியும், எதிரி கையால் அடித்தும், காலால் உதைத்து கீழே விழுந்தவரை கையை பின்னால் கயிற்றால் கட்டி வைத்ததற்காகவும், வாதியின் கணவரை செருப்பால் அடித்து இழிவுபடுத்திய குற்றத்திற்காகவும், வாதியின் குடும்பத்தை ஆயுதங்களை காட்டி என்னைக்கு இருந்தாலும் உன் சாவு எங்கள் கையில் தான் என்று எதிரிகள் மிரட்டிய குற்றத்திற்காக அதிராம்பட்டிணம் காவல் நிலைய காவல் ஆய்வாளரால் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது :–**

குற்ற இறுதி அறிக்கை மற்றும் இதர வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழப்பாணை அனுப்பட்டுள்ளது. எதிரி அழைப்பாணையின் பேரில் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அவருக்கு வழக்கு அவணங்களின் சட்டப் பிரிவு 207 கு.வி.மு.ச வின் கீழ் இலவசமாக நகல் வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, இரு தரப்பும் கேட்கப்பட்டு தகுந்த ஆதாரங்கள் மற்றும் நம்புவதற்கு காரணங்கள் இருப்பதனால் எதிரி மீது இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் ச/பி.294(b),323,342,355,506(2)–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து, குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 240–ன் கீழ் எதிரிகளுக்கு எடுத்துரைத்து வினவியபோது எதிரிகள் பொய் வழக்கு என்றும், அவர் குற்றவாளிகள் இல்லை என்றும், தெரிவித்தார். எனவே, வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகள்.**

இவ்வழக்கில் அசா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. அசா.ஆ.1 முதல் அசா.ஆ.09 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பு சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்பட்டவில்லை. அசா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் அரசு தரப்பி வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளனர்.

**5.அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு**

(5.1) அ.சா.1 திருமதி. சரசு புகார்தாரர் தனது சாட்சியத்தில், தன் கணவர் மனநல பாதிக்கப்பட்டு 09 வருடமாக மாத்திரை சாப்பிட்டு வருவதாகவும், சில நேரங்களில் வித்தியசமாக நடந்துகொண்டு, தனாகவே கீழே விழுந்து சுவற்றில் முட்டிக்கொள்வார். இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 தன்னுடையது. அதில் உள்ள விபரம் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 திருமதி. அஞ்சம்பாள் சம்பவ சாட்சியாக முன்னிடப்பட்டுள்ளார். அவர் வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை

என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.3 திரு. குமாரவேல் மற்றும் அ.சா.4 திரு. சோமசுந்தரம் ஆகியோர்கள் பார்வை மகசர் சாட்சிகளாக முன்னிடப்பட்டுள்ளார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக எங்களுக்கு எதுவும் தெரியாது. பார்வை மகசரில் உள்ள முதலாவது மற்றும் இரண்டாவது கையெழுத்து அசா.ஆ3. மற்றும் அசா.ஆ4 தங்களுடையது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

(5.3) அ.சா.5 திரு. கருணாநிதி (சிறப்பு உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில், கணேசன் SSI, ராஜேந்திரன் SI அவருக்காகவும் சாட்சியம் அளிப்பதாகவும், வாதி சரசு என்பவரிடம் இருந்து புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்து சம்பவ இடம் சென்று பார்வை மகசர் அ.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 தயார் செய்ததாகவும், எதிரிகள் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று சான்று அளித்துள்ளார். இறுதியாக, எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான அம்சங்களை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1) (ஆ) வின் படி வினவிய போது குற்றம் சாட்டப்பவர் அவற்றை பொய் சாட்சி என மறுத்தனர். குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் முன்நிறுத்தப்படவில்லை.

**7.தீர்வு:-**

(7.1) இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவெனில், எதிரி மீது குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

(7.2) அரசு தரப்பின் குற்றம் சாட்டப்பட்ட நபர், அசிங்கமான வார்த்தைகளால் பேசி, காயத்தை ஏற்படுத்தியும், அவமானப்படுத்தியதற்காகவும், கொலை மிரட்டல் விடுத்தார் என்று குறிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

(7.3) இருதரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்களும், சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்களும் பரிசீலிக்கப்பட்டது. அசா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் சம்பவம் குறித்து போலிசார் விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்போது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக பிறழ் சாட்சியமாக மாறி சாட்சியம்

அளித்துள்ளனர். அரசு தரப்பு வழக்கறிஞர் அசா.5 மூலமும் அரசு சான்றாவணம் மூலமும் குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிராக குற்றச்சாட்டு மெய்பிக்கப்ட்டுள்ளது என்று வாதிட்டார்.

(7.4) குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கபடவில்லை என்று வாதிட்டார்.

(7.5) இந்நிலையில் அசா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சியங்களின் சாட்சியம் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மெய்பிக்கும் வகையில் அமைந்துள்ளதா? என பரிசீலனை செய்வது அவசியமாகிறது. அசா.1 வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபராகவும், புகார்தாராகவும், முன்னிலை படுத்தப்பட்டுள்ளார். மேற்படி சாட்சி அரசு தரப்பில் முதல் விசாரணை செய்யப்பட்டபோது அ.சா.1, முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும், அரசு தரப்பில் மேற்படி சாட்சிகள் பிறழ்சாட்சியங்கள் என குறிப்பிட்டு நீதிமன்ற அனுமதியை பெற்று குறுக்கு விசாரணை செய்துள்ளன. மேற்படி சாட்சியங்கள் அரசு தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தின் போது குற்றச்சாட்டு பற்றி ஏதுவும் தெரியாது என்று சொல்லியுள்ளார்கள். எனவே, அ.சா.ஆ.1 புகார் மனு மற்றும் அ.சா.ஆ.5 முதல் தகவலறிக்கை ஆகியவற்றிக்கு முரணமாகவும் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளனர். எனவே, மேற்படி சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளனர் என்பது தெளிவாகிறது. மேற்படி அ.சா.1 மற்றும் இதர சாட்சிகள் அ.சா.1ன் கணவர் சம்பவத்திற்கு முன்பு இருந்தே மனநலம் பாதிக்கப்பட்டு இருந்து வருகிறார் என்பதும் அவர் சுயநினைவு இன்றி சில நேரங்களில் அவரை தன்னைத் தானே காயப்படுத்திக்கொள்கிறார் என்பதும், மேற்படி சாட்சியங்களின் மூலம் தெரிய வருகிறது.

(7.6) எனவே, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அசா.5 மற்றும் புலன் விசாரணை அதிகாரியான சாட்சியம் மட்டுமே வைத்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் தான் குற்ற இறுதி அறிக்கையில் விவரிக்கப்பட்ட குற்ற செயலில் ஈடுபட்டார் என முடிவு செய்ய இயலாது. எனவே, பாதிக்கப்பட்ட நபராக முன்னிடப்பட்டுள்ள மேற்படி அசா.1 மற்றும் அ.சா.2 முதல் அ.சா.4 வரையானவர்களின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் மாறுபட்டு முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளவாறு எதிரிகள் குற்றச்செயலில் ஈடுபட்டிருக்க கூடுமா? என்ற சந்தேகம் எழுகிறது.

(7.7) எனவே, அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான

ச/பி.294(b),323,342,355,506(2)—குற்றச்சாட்டுகனை மெய்பிக்கும் வகையிலான நம்பும்படியான சாட்சியத்தை முன்னிட தவறிவுள்ளதால், மேற்படி சட்டப்பிரிவுகளின் உட்கூறுகளை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை. எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிரான குற்றசாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்க தவறியுள்ளனர் என்று முடிவு செய்கிறது.

**8.முடிவாக**,

அரசு தரப்பில், குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிரான இதச பிரிவுகள் ச/பி.294(b),323,342,355,506(2)—ன் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்க தவறிவிட்டனர் என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டுவர்களுக்கு நல்கி குற்றவாளிகள் இல்லை என்று கு.வி.மு.ச பிரிவு 248(1) விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

ii) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

iii) இவ்வழக்கில் எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

/இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஆகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது./

SUDHARSAN T

Digitally signed by SUDHARSAN T
Date: 2026.07.03 19:26:51 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை

அரசு தரப்பு சாட்சிகள்

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. சரசு |
| அ.சா.2 | திருமதி. அஞ்சம்பாள் |
| அ.சா.3 | திரு. குமாரவேல் |
| அ.சா.4 | திரு. சோமசுந்தரம் |
| அ.சா.5 | திரு. கருணாநிதி |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | |
|---|---|
| அ.சாஆ.1 | 07.02.2021ம் தேதியிட்ட புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் |
| அ.சாஆ.2 | 07.02.2021 ம் தேதியிட்ட  சமாதான மனுவில் உள்ள கையெழுத்து |
| அ.சாஆ.3 | 07.02.2021ம் தேதியிட்ட  பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து |
| அ.சாஆ.4 | 07.02.2021ம் தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| அ.சாஆ.5 | 07.02.2021–ம் தேதியிட்ட  முதல் தகவல் அறிக்கை |
| அ.சாஆ.6 | 07.02.2021பார்வை மகசர் |
| அ.சாஆ.7 | 07.02.2021 மாதிரி வரைபடம் |
| அ.சாஆ.8 | 07.02.2021விபத்து பதிவுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.9 | 07.02.2021ம் தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

அரசு தரப்பு சான்றுபொருள்–  இல்லை

எதிரி  தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப் பொருட்கள் – இல்லை

SUDHARSAN T

Digitally signed by SUDHARSAN T
Date: 2026.07.03 19:27:00 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை